# குணம் மாறும் எலிகள்

## சமூக, அரசியல், பொருளாதார நாடகம்



உ. நம்பிராம்,
வி. ஜெகநாதன்

# குணம் மாறும் எலிகள்

## சமூக, அரசியல், பொருளாதார நாடகம்

உரும்பிராய்
வி.ஜெகநாதன்
(நக்கீரன்)

2019

தலைப்பு :- குணம் மாறும் எலிகள்

ஆசிரியர் :- வி.ஜெகநாதன்

முதற்பதிப்பு :- மார்ச் 2019

பதிப்புரிமை :- ஆசிரியருக்கு

பக்கங்கள் :- **14 (i-xiv) + 27**

**ISBN No** :- **978-955-43879-1-1**

அச்சுப்பதிப்பு :- சக்தி பிறிண்டேர்ஸ்,
உரும்பிராய். பலாலிறோட்.

விலை :- **200/=**

# சமர்ப்பணம்

எனது பெற்றோர்களான

ஞானப்பிரகாசம் விசுவாசம்,

விசுவாசம் செபமாலை மற்றும்

என்மீது கரிசனையும் அன்பும் பாராட்டிய

எனது சிறியதாயார்

திருமதி.புதுமை மரியாம்பிள்ளை அவர்களுக்கும்,

மற்றும்

என்னைச்சுமந்த எனது அன்பு மனையாள்

இன்பராணியின் பெற்றோர்களான

இளையவி இராசேந்திரம்,

இராசேந்திரம் மிக்கேலம்மா

ஆகியோருக்கும்

**"குணம் மாறும் எலிகள்"**

சமர்ப்பணம்.

# "குணம் மாறும் எலிகள்" - நாடகம்

இந்த நாடக ஆற்றுகையினை ஒரு தடவை பார்த்து ரசிப்பதற்கும், பிரதியினை வாசிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இது சிறுவர்களுக்காக சிறுவர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட நாடகமாக எடுத்துக்கொள்ளலாம்.

சில விடயங்களை நாம் மறைமுகமாகச் சொல்வதற்கும் அபத்தநாடக வடிவங்களை தேர்வு செய்கின்றோம். இவ்வாறான நோக்கங்களுக்காகச் சிறுவர் நாடகங்களைப் பயன்படுத்துவதுமுண்டு.

சிறுவர் நாடகங்களின் பொதுவான விதிகளைப் பொறுத்தவரை நாடக ஆற்றுகையில் பங்குபெறும் சிறுவர்களும் மகிழ்ந்து பார்வையாளரையும் மகிழ்விக்க வேண்டும் என்பதும் முக்கியம். சிறுவர் நாடகங்களின் கதைப்போக்கும் காண்பிய முறைகளும் ஓரளவாவது நாடகத்தில் பங்கேற்கும் சிறுவர்களதும் ஏனைய சிறுவர்களதும் மனங்களில் மகிழ்வை ஏற்படுத்தக் கூடியனவாக அமைவது சிறப்பானதாகும். இவ்வாறான நாடக பாடங்களின் உட்கருத்துக்கள் கனதிமிக்க செய்திகளாக ஏனைய பார்வையாளரை சென்றடையும்.

இந்த நாடகத்தைப் பொறுத்தவரை பிரச்சனைகள் வெளிப்படையாகவே முன்வைக்கப்படுகின்றன. இதில் சிறுவர்களது மனமகிழ்வுக்கான ஆற்றுப்படுத்தல்கள் (ஒருசில இடங்களைத் தவிர) இல்லையென்றே தோன்றுகின்றது.

இதனை சிறுவர் நாடகம் என்ற அடையாளத்தை விடுத்து, சமூக அரசியல் நாடகம் என்ற அரங்கவெளிக்கு எடுத்துச் சென்று மதிப்பீடு செய்யின், இதன் சமூகத் தாக்கங்களும், இந்நாடகம் சமூகத்திலும், நாட்டிலும் உள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதில் பயன்படுத்திய பாத்திர உருவாக்கமும் உற்று நோக்கத்தக்கன.

முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக மக்களினது அவல வாழ்வும், இந்த அவல வாழ்க்கையை அரசியலாக்கி பிழைப்பு நடாத்தும் அயோக்கியத்தனங்களும், இவற்றுக்கெதிரான விவேகமற்ற, உணர்ச்சி வசப்பட்ட போராட்டங்களும், தங்களின் பலத்தை உணராமல் இன்னும் இவைபோன்ற போலியான செயற்பாடுகளுக்குள் அள்ளுண்டு செல்வதும், தமது மீட்சிக்கான பாதையினை வகுத்துக்கொள்ளத் தெரியாத அப்பாவி எலிகளாக வாழ்வதும் மிகக் கச்சிதமாக எடுத்தியம்பப்படுகின்றது.

"நிச்சயமாக எலிகள் குணம்" மாற வேண்டும். மாற்றமொன்றே மாறாதது. இந்த மாற்றத்திற்கான ஒன்றுபடுதலும், பூனைகளை அதிகாரத்திலிருந்து வெளியேற்றலும் நிதர்சனமாக்கப்பட வேண்டும்.

நன்றி

வ.மோகநாதன்

# "குணம் மாறும் எலிகள்" நாடகப் பிரதி வாசித்ததன் கருத்துப்பகிர்வு

நாடக ஆசிரியர் ஒருவருக்கு அரங்கு சார்ந்த விசாலமான ஓர் அறிவும் சமூகம் சார்ந்த விரிந்த நோக்கும் ஏனைய துறைகள் சார்ந்த அடிப்படை விடயங்களும் தேவைப்படுகின்றது.

அவ்வாறு நோக்கின் நாடகம் ஒன்றையோ அல்லது ஏனைய கலை வடிவங்களையோ சிறுவர்களுக்காக படைக்கும் போது சிறுவர்கள் சார்ந்த உளவியல் சிறுவர்களின் மனப்பாங்கு அவர்களுடைய கொள்ளளவு இப்படி பல விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

குணம் மாறும் எலிகள் நாடகத்திற்காக கொடுக்கப்பட்டுள்ள முன்னுரையின் "சிறுவர்களால் ஆற்றப்படுவது சிறுவர் நாடகமாகும்" என்று குறிப்பிடுகின்றது. இருப்பினும் இன்று சிறுவர் அரங்கு பல பரிமாணங்களை பெற்று நிற்கிறது சிறுவர் நாடகம்.

- சிறுவர்களுக்காக சிறுவர்களால் நடிக்கப்படுவது.
- வளர்ந்தவர்களால் சிறுவர்களுக்கு நடிக்கப்படுவது.
- சிறுவர்களும் வளர்ந்தவர்களும் இணைந்து சிறுவர்களுக்கு நடிக்கப்படுவது. எனும் நிலையில் வளர்ந்து வருகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் சிறுவர்களுக்காக படைக்கப்படும் நாடகங்களின் பார்வையாளர்கள் சிறுவர்களே.

எனவே முன்னுரையில் குறிப்பிட்டது போல சமுதாயத்திற்கும் வாழ்விற்குமான காத்திரமான கருத்தியலை கொண்டிருக்க வேண்டும் எனினும் அது மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பார்வையாளராகிய சிறார்களின் உலகத்திற்குள்ளேயே அமைந்திருப்பதே பொருத்தமானது.

இன்றைய நவீன உலகில் புறநடையாக சிறார்கள் தமது வயதிற்கு மீறிய செயல்களையும் முன்னெடுத்தலை கொண்டிருப்பினும் சிறார்களின் உலகம் தனித்துவம் மிக்கது. 1978ம் ஆண்டு குழந்தை ம.சண்முகலிங்கம்

அவர்களால் **"கூடி விளையாடு பாப்பா"** எனும் சிறுவர் நாடகம் எழுதி அரங்கேறப்பட்டது. இன்றுவரை தொடர்ச்சியாக பலராலும் இது தயாரிக்கப்படுகின்றது. சிங்கள அரங்கில் "மிருகங்கள் கட்டிய விடு" எனும் ஓர் அற்புதமான சிறுவர் நாடகத்தை பார்த்ததன் உந்துதலே இந்நாடகத்தை எழுத தோன்றியதாக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் கூறுகின்றார். இந்நாடகமே ஈழத்து தமிழ் நாடக அரங்கில் முன்னோடியாக சிறுவர் நாடகமாக கருதப்படுகின்றது.

கூட்டுழைப்பு, கூட்டுறவு, ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், மன்னிப்பு எனும் அம்சங்கள் நாடகம் முழுக்க வியாபித்து நின்றாலும், சிறுவர்களின் ஆளுமைக்கு மீறிய வசனங்கள் தத்துவங்கள் மேற்கோள்கள் எவையும் பயன்படுத்தப்படாது சிறுவர்களை மகிழ்வான உலகத்திற்குள் வைத்து மேற்படி விடயங்கள் அனைத்தும் கூறப்படுகின்றது. இப்பண்புகளை சிறுவர் நாடகத்திற்கான ஓர் மாதிரியாக கொள்ள முடியும்.

**"குணம் மாறும் எலிகளும்" சிறுவர் அரங்கும்**

மேலே கூறப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாக வைத்தே இந்நாடகத்தையும் நோக்க முடிகின்றது. இங்கு தொன்று தொட்டு சிறுவர்களுக்கான கலை இலக்கியங்களில் சிறுவர்கள் விரும்புகின்ற பிராணிகள், பறவைகள், பாத்திரங்களே இங்கும் வருகின்றது. பூனை எலிகள் எனும் பாத்திரங்களைக் கொண்டு கதை நகர்த்தப்படுகின்றது. இருப்பினும் அவைகளின் உரையாடல்கள் கனதி மிக்கதாகவும் நீண்ட உரையாடலாகவும் அமைவதால் வளர்ந்தோருக்குரிய நாடகம் போலவும் அமைகிறது.

ஒடுக்கப்படுகின்ற மக்கள் மத்தியில் எழுகின்ற பிரச்சினைகளும் அம்மக்களுக்கு ஒரு முறையான தலமை ஒன்றின் தேவையையும் மேற்படி குணம்மாறும் எலிகள் சிறுவர் நாடகம் பேசுகிறது. இது எமது நாட்டிற்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இன்றியமையாத செய்தியை கூறுகின்ற போதும் ஓர் சிறுவர் நாடகத்தினூடாக மிகப்பெரும் கருத்தியலை கூறவிளைவது பல ஐயப்பாடுகளை ஏற்படுத்துகின்றது.

இந்த நாடகத்தின் ஆசிரியர் ஜெகநாதன் அவர்களது சமூக நோக்கும் ஆழமான சமூக விஞ்ஞான அறிவுப்புலமும் இன் நாடகப்பிரதியினூடாக வளர்தோருக்கான செய்தியாக சிறப்பாக அமைகிறது. இருப்பினும் மேற்சொன்னது போல ஓர் சிறுவர் நாடகத்தின் படைப்பாக பார்ப்பதற்கு பல ஐயப்பாடுகள் இருக்கின்றன. அதற்கு சில உதாரணங்களை குறிப்பிடமுடியும்.

"எலி 2 - எங்கட வாழ்வு தந்த கடல் வளம் என்னாச்சு? கடலை நம்பி வாழும் மக்களின் நிலை என்னாச்சு. தேசிய இனப்பிரச்சினையைப் பற்றி பிரிச்சு மேயிறவே எங்கட பிரச்சினையை பற்றி மூச்சு விடாமல் இருக்கினம்."

எனும் உரையாடலும் மற்றும் ஓர் இடத்தில்

எலி - 5 - "கொண்டு குவிக்கிறதுக்காக, வீரச்சாவு சாவுறத்துக்காக, இழக்கிறதுக்காக, எங்களை நாங்களே அழிக்கிறதுக்காப் போராடேல"

என்று தொடரும் வசனமும் பல உரையாடல்களையும் பிரதியில் அவதானிக்க முடிகின்றது.

"குணம்மாறும் எலிகளின்" ஆசிரியர் ஏற்கனவே பல நூல்களை, இலக்கிய படைப்புக்களை படைத்த அனுபவம் மிக்க ஓர் படைப்பாளி. அவர் தன் அடிப்படையில் "குணம் மாறும் எலிகள்" சிறுவர் நாடகப் படைப்புக்கான பல நியாயங்களை முன்வைக்கின்றார். இருப்பினும் இந்நாடகப் பிரதியை உள்ளது உள்ளபடி தயாரித்து சிறுவர்கள் முன்னிலையில் ஆற்றுகை செய்த பின் ஏற்படும் கலந்துரையாடலில் அவர்களின் மதிப்பீடே இந்நாடகப் பிரதியின் மதிப்பீடாக அமைவது பொருத்தமானதாக இருக்கும்.

க.சத்தியசீலன்
நாடக இயக்குனர்,
நாடக ஆற்றுகையாளர்,
செம்முகம்
11.12.2018

## “குணம் மாறும் எலிகள்” பற்றிய என்னுரை

இந்தச் சிறுவர் நாடகம் 1994 காலப்பகுதியில், திருகோணமலையில் தமிழ்த்தினப் போட்டிக்காக, சிறுவர் நாடகமாக எழுதப்பெற்றது. திருகோணமலை புனித வளனார் மாணவர்களால் நடிக்கப்பெற்று, என்னால் நெறியாள்கை செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டது. இந்தச் சிறுவர் நாடகம் தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

### திருகோணமலையில் கலைப்பணி

1994ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து 2000ஆம் ஆண்டு காலப்பகுதிவரை திருகோணமலையில் வேலைசெய்யும் வாய்ப்புக்கிடைத்தது. அந்தக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட கீழைத்தென்றல் கலாமன்றத்தினூடாக பாடசாலைக்கு அப்பாலும் நாடகங்களை எழுதியும், நெறியாள்கை செய்தும் நாடகப் பட்டறைகள் நடத்தியும், நடத்துவித்தும் பணியாற்றிக்கொண்டிருந்தேன். “கீழைத்தென்றல் கலாமன்றம்” உருவாகிய பின்னணியை இங்கு குறிப்பிடுவது அவசியமற்றது என்பதனால் அதைக் குறிப்பிடவில்லை.

அக்காலப்பகுதியில், திருகோணமலை புனிதவளனார் பாடசாலையில் படிப்பித்துக்கொண்டிருந்த ஆசிரியை திருமதி.குணரத்தினம் அவர்கள், தமிழ்த்தினப் போட்டிக்காக ஒரு சிறுவர் நாடகத்தை எழுதி, இயக்கி அரங்கேற்ற உதவும்படி கேட்டார்.

புனித சவேரியார்கோவில் பங்கைச்சேர்ந்த பிள்ளைகளையும், நகரசுத்தித் தொழிலாளர்களுடைய பிள்ளைகளையும் மிகப்பெரும்பான்மையாகக்கொண்ட அந்தப்பாடசாலை, இதுவரை எந்தக்கலை இலக்கியப் போட்டிகளிலும் பங்குபெறும் வாய்ப்பைப் பெறவில்லை என்று ஆசிரியை அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். நானும் அவருடைய வேண்டுகொளை ஏற்றுக்கொண்டேன்.

## கதை பிறந்த களம்

1988இல் கொழும்பு புறக்கோட்டையில் மலிபன் வீதியிலுள்ள ஒரு விடுதியில் ஒருசில மாதங்கள் தங்கியிருந்தேன். அந்த விடுதியின் பின்னால் ஒரு உணவகம் இருந்தது. அந்த விடுதியின் பின் ஜன்னல் வழியாகப் பார்த்தால், அந்த உணவகத்தின் பின்பக்கம் தெரியும். அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்கள், சிலவேளைகளில் தாங்கள் சாப்பிட்ட உணவின் மிச்சத்தை அந்த உணவகத்தின் பின்பக்கமாக ஓட்டுக்கூரையில் போட்டுவிடுவார்கள். பூனைகளும் எலிகளும் அந்த உணவு மிச்சத்திற்காக, அந்தக் கூரையில் பிரசன்னமாயின.

ஒருநாள், அப்படிப் போடப்பட்ட உணவு மிச்சத்திலுள்ள மீன்தலை ஒன்றினை ஒரு தடித்தஎலி சுவைத்துக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த பூனை ஒன்று அந்த மீன்தலையை அபகரிக்கும் தோரணையில் அந்த எலியை நெருங்கியது. உடனே, அந்த எலி சீற்றமடைந்து நிமிர்ந்து, பூனையை நோக்கிச் சீறியது. பூனை அகன்று போனது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தக்காட்சி, எனது சிந்தனைத் திரையில் அடிக்கடி நகர்ந்து போனது. ஒரு ஆழமான பதிவையும் ஏற்படுத்தவே செய்தது. அந்த நிகழ்வே "குணம் மாறும் எலிகள்" சிறுவர் நாடகத்திற்கு அத்திபாரமானது.

## ஒரு பரீட்சார்த்த களம்

இலக்கிய நாடகமோ, சமூகநாடகமோ, சிறுவர் நாடகமோ, அது அரங்கேற்றப்படும் ஒவ்வொரு தடவையும், அந்த ஆற்றுகை, ஒரு பரீட்சார்த்த களமாகவே அமைகின்றது. வலுவான கருத்துப்புலப்பாடுகளை, உத்திகளை, அழகியலை விருத்தி செய்யும் வாய்ப்பையும் அளிக்கிறது.

2006ம் ஆண்டு காலப்பகுதியில் நான் வெளிநாட்டிற்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டேன். எனது பாதுகாப்புக்கருதி, எனது மனைவி, மக்கள் என்னை வெளிநாடு செல்வதற்கு வற்புறுத்தினார்கள். இலங்கையில் எனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் விடயங்களைப் பற்றிய ஆவணங்களை அவசரம் அவசரமாகத் தயாரிக்க வேண்டியிருந்தது. அப்போது குணம்மாறும் எலிகள் நாடகம் கணினியில் அச்சுப்பதிக்கப்பட்டிருந்தது. அந்த நாடகப் பிரதி எப்படி எனது

ஆவணத்தொகுப்பிற்குள் புகுந்துகொண்டது என்று எனக்குத் தெரியாது. சுவிர்சலாந்தில், அந்த ஆவணக்கோப்புக்களைப் புரட்டிப்பார்த்தபோதுதான் அந்த நாடகப் பிரதி அதற்குள் இருப்பதைக் கண்டுகொண்டேன்.

## நாடகப் பிரதிக்கான கோரிக்கை

திருகோணமலையில் கீழைத்தென்றல் கலாமன்ற உறுப்பினர்களுள் ஒருவரும், சிறந்த நடிகையுமான விஜயகுமாரி (நந்தினி) ஜேர்மனியில் விவாகம் செய்திருக்கிறார். அவர் அங்கு விடுதலைப் புலிகளின் தமிழ்மொழிக்கல்வி நிலையத்தில் படிப்பித்துக்கொண்டிருந்தார். அவர் தனக்கு ஒரு நாடகம் எழுதித் தரும்படி தொலைபேசியின் மூலம் கேட்டிருந்தார். அதை ஏற்றுக்கொண்ட நான், "குணம் மாறும் எலிகள்" சிறுவர் நாடகத்திற்கு, அன்றைய அரசியல் சூழலுக்கு ஏற்ப அழுத்தமும் கனதியும் கொடுத்து எழுதி அனுப்பினேன். அந்த நாடகப்பிரதியை ஜேர்மனியில் உள்ள விடுதலைப்புலிகள் அமைப்பினர் படித்துப் பார்த்து, அது நல்ல நாடகம் என்றும், தங்களையும் விமர்சித்து இருக்கிறது என்றாலும், அந்த நாடகத்தைப் பல இடங்களில் மேடையேற்ற முடியும் என்றும், ஆனால், ஜேர்மனியில் அன்றை காலகட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு இருந்த நெருக்கடி காரணமாக அதை அரங்கேற்ற முடியாமைக்காக வருந்துவதாகவும் விஜயகுமாரி எனக்கு அறிவித்தார். எனக்கு வியப்பாக இருந்தது. நல்ல சகுனமாகவும் தோன்றியது. அந்த நாடகப் பிரதியை அவர்கள் அங்கிகரித்தமையானது, அவசியத்தை புரிந்துகொண்ட ஆரோக்கியமான சமிக்கை.

## இரண்டாவது அரங்கேற்றம்

2006இல் சுவிஸ் சென்ற எனக்கு வதிவிட வீசா நிராகரிக்கப்பட்டதால் நான் 2011 முற்பகுதியில் இலங்கைக்கு வந்துவிட்டேன். பின் கொழும்பிலிருந்து எனது பிறப்பிடமான உரும்பிராய்க்கு வந்து சேர்ந்தேன். எனது குடியேற்றத்திட்டக் கிராமம் ஊரெழு கிராமத்தின் எல்லைப் புறத்தில் இருந்ததால், ஊரெழு கிராமசேவகர் பிரிவிற்குள் உள்ளடங்கியிருந்தது. எமது பாரதிதாசன் ச.ச.நிலையத்தின் ஆண்டுவிழாவில் இந்த "குணம் மாறும் எலிகள்" (ஜேர்மனிக்கு அனுப்பப்பட்ட பிரதி) நாடகத்தை மாற்றம் எதுவும்

செய்யாமல், சிறுவர்கள், வளர்ந்தவர்கள் இளைஞர்களைக் கொண்டு அரங்கேற்றினேன். சபையோர்களின் பாராட்டும் கிடைத்தது.

## நூலுருவில் "குணம் மாறும் எலிகள்"

இந்த நாடகத்தை நூலுருவில் கொண்டு வருவதற்காக, இந்த நாடகத்தின் ஜேர்மனி பிரதியை மீண்டும் மீண்டும் படித்தேன். போருக்குப் பின்னரான அரசியல் சூழலை மனங்கொண்டு, தமிழ்த்தேசியப் பிரச்சினையையும், தமிழ்த் தேசியத்துள் இருக்கும் சமூகப் பிரச்சினைகள் துன்பங்கள், அவலங்கள், சமூக ஒடுக்குமுறைகள், சுரண்டல், ஓரவஞ்சனை, தமிழர்கள் தோற்றுப்போனதற்கான காரணங்கள் மற்றும் தமிழ், முஸ்லீம், சிங்களவர்கள் மத்தியில் நிலவும் முரண்பாடுகள், முறுகல்கள், மோதல்கள், அயலுறவு, சர்வதேசத் தலையீடு போன்றவைகளையும் கருத்தில்கொண்டு மிகவும் சிரமப்பட்டு இந்த மூன்றாம் பிரதியை எழுதினேன்.

தேசியம், தேசியம் என்று மேலோட்டமாகவே மக்களின் சிந்தனைகளை கழுவி மக்களை ஏமாற்றுகிறார்கள். புண்ணுக்குப் புனுகுதடவுவதை வெறுக்கிறேன். மருந்துநீரால் புண்ணைக்கழுவி சீழ்பிதுக்கித் தூய்மையாக்கி மருந்திட்டுக் குணமாக்குவதே சிறந்த வழி. வேதனை தந்தாலும் புண் குணமாகவேண்டும் என்ற வேட்கை.

இது ஒரு விமர்சனப்பாங்கான நாடகப்பிரதி. வெளிப்படையாக, இன்னும் சொன்னால் அப்பட்டமாக இதைச் சொல்லியிருக்கின்றேன். வன்முறைக்கலாசார சகதிக்குள் சிக்குண்டுபோன எமக்கு, வரலாறு கொடுத்த மரண அடிக்குப் பதிலாக நன்முறைக்கலாசார உந்துதலையும் இந்தப் பிரதியில் உள்ளடக்கினேன். சார்புவாதம் மனிதநேயத்தை மூழ்கடித்துவிடும். இந்த அடிப்படையில் ஆரம்பத்தில் இருந்த சிறுவர் நாடகக்கடுகுக்குள் மலையைப் புகுத்தவேண்டி ஏற்பட்டது. இது, சிறுவர் நாடகத் தன்மையிலிருந்து, அதைப் புடைக்கச் செய்துவிட்டதை மறுக்கவில்லை; ஏற்றுக்கொள்கின்றேன்.

## அவசியமானது :-

தமிழ் மக்களுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும், அவர்களின் மொத்த மற்றும் அடிப்படையான நலன்சார்ந்த ஒரு கூட்டு அவசியமாகின்றது. அரசியல் கட்சிகள், தமது நலன் மற்றும் கட்சி நலன்சார்ந்து அழுங்குப்பிடியாக இருந்தாலும் மக்களின் விடிவை பிரச்சினைகளை மனங்கொண்டு ஒரு நெகிழ்வுத் தன்மையோடு ஒரு பொதுவான கொள்கை வகுப்பு மற்றும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்து, ஜனநாயக வழிமுறையிலான, போராட்டத்தைத் தீவிரப்படுத்துவது, பலவந்தப்படுத்துவது அவசியப்படுகிறது. இந்த அவசியத்தைத் தெரிந்தேற்றுக்கொள்ளாவிட்டால் தமிழர்களுக்கு விமோசனம் கிட்டாது.

இப்போது, இங்கே நிலவும் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டு அல்லது கூட்டுக்கான முயற்சிகள் மக்களின் நலன்சார்ந்ததாக இல்லை. ஒவ்வொரு கட்சித்தலைமையும் தனது சொந்த நலனைத் தக்கவைத்துக்கொள்ளும் தந்திரத்தின் அடிப்படையில், அதாவது ஒரு பாராளுமன்ற ஆசனத்தையேனும் பெற்றுவிடவேண்டும் என்ற முனைப்புடன் செயல்படுகிறது. மக்களை வழிநடத்துபவர்கள், மக்களின் நலன்சார்ந்து சிந்திப்பவர்கள், ஊடகங்கள், மக்களுக்கு இதைப் புரியவைக்கவேண்டும். ஒன்றுபடுதல் என்பதன் அவசியத்தை பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்தும், சக்திகள், ஊடகங்கள் மக்களுக்கு நிலைமைகளைத் தெளிவுபடுத்த வேண்டும். இவைகளை மனங்கொண்டு இந்தச் சிறிய நாடகப்பிரதிக்குள் கனதியான விடயங்களைச் செலுத்தியிருக்கின்றேன். தேவையைத் தற்காலிகமாகவேனும் பின்போடலாம், ஆனால் அவசியத்தைப் பின்போடமுடியாது.

## விசாரணை

**“உன்னை விசாரணை செய் - அல்லதுபோகில்**
**வரலாறு உன்னை விசாரணை செய்யும்”**

இந்த எடுகோளை நானே எனக்கு உருவாக்கிக் கொண்டேன். எனது பலம், பலவீனம், குறைகளை விசாரணை செய்கின்றேன். எனது விசாரணை என்னை மவுனிக்கச் செய்கிறது. வெட்கமும் வேதனையும் அடையச் செய்கிறது. இருந்தும், இந்த விசாரணை என்னுள் ஒரு விரிவை

ஏற்படுத்துகின்றது. முழுமையை நோக்கி என்னை நகர்த்துகின்றது. எனது குற்றங்குறைகளோடு, அடுத்தவனின் குற்றங்குறைகளையும் புரிந்துகொள்ளச் செய்கிறது. ஒருவித மகிழ்வை என்னுள் சுரக்கச் செய்கிறது.

இந்தச் சுயவிசாரணை ஒவ்வொருவருக்கும் அவசியம். கட்சிகளாக, இயக்கங்களாக, கலை இலக்கிய அமைப்புக்களாக, வெகுசனத்தாபனங்களாக மற்றும் தனிநபராக இருந்தால் என்ன இந்த சுயவிசாரணை அவசியமானது. தமிழர்கள், தமிழ்பேசுபவர்கள், அரசியல் தலைமைகள் தங்களை விசாரணை செய்யவில்லை. தங்கள் குறைகுற்றங்களை, தவறுகளை, சுயநல வேட்கைகள் போன்றவைகளை சுயவிசாரணை செய்யவில்லை. தங்களைத் திருத்திக்கொள்ளவில்லை. மக்களையும் திருந்தவிடவில்லை. இதனால், ஒட்டுமொத்தமாகத் தமிழர்கள் மீளமுடியாமல் அதலபாதாலத்திற்குள் வீழ்ந்து கிடக்கிறார்கள். சிங்கள பேரினவாத மேட்டுக்குடி அதிகார வன்முறைச் சக்திகளால் தமிழர்கள் வீழவில்லை என்பது எனது கருத்து. தமிழர்களே தங்களுக்குப் புதைகுழி தோண்டிக்கொண்டார்கள். சிங்களப் பேரினவாத மேட்டுக்குடி ஆதிக்கசக்திகளின் மேல் பழியைப் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். வளம் இருந்தும், வலுவிருந்தும், வல்லமை இருந்தும், துணிவிருந்தும், வீரமும் தியாகமும் இருந்தும் தோற்றுப்போனோம் என்றால் எவைகள் இல்லாமல் தோற்றுப் போனோம் என்று நம்மை நாமே விசாரணை செய்வது அவசியம் இல்லையா?

### வரலாறு விசாரணை செய்கிறது

விசாரணை என்பது, "நோய் நாடி, நோய் முதல்நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்று வள்ளுவர் சொல்வதைப் போன்றது. அதாவது "வைத்தியனே உன்னைக் குணமாக்கிக்கொள்" என்று வரலாற்று நாயகன் கிறிஸ்து எடுத்தாண்ட மேற்கோள் போன்றதாகும். நாம் நம்மை விசாரணை செய்யத் தவறியதால் வரலாறு நம்மை விசாரணை செய்கிறது. வரலாற்றின் இந்த விசாரணை, காவல்துறை விசாரணையிலும் கடுமையானது, கொடுமையானது. வரலாற்று விசாரணையின் அனர்த்தங்களை வார்த்தைகளுக்குள் வரையறை செய்யமுடியாது. நமது எதிர்கால

தலைமுறையின் இருத்தலை இழக்கும் அளவிற்கு நாம் விசாரணை செய்யப்படுகிறோம். இதை நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்.

அதனால் அடக்குமுறையாளர்கள் மேலும், ஆதிக்க சக்திகள் மேலும், அயலார் மேலும் பழியைத் தூக்கிப் போடுகிறோம். உள்ளூர் ஓநாய்கள், நரிகள், முதலைகள், தாட்டான்கள் (குரங்குகள்) மதில்மேல் பூனைகள், எட்டப்பன்கள் போன்றவர்கள் மேல் பழிதூற்றுகின்றோம். **இந்த எதிர்மறைச் சக்திகளை உருவாக்கியதில், நமக்குள்ள பங்கு பாத்திரத்தை நாம் ஏற்றுக்கொள்வதில்லை.** சலுகைப் பருக்கைகளுக்காகவும், வசதிப் பொட்டலங்களுக்காகவும், குத்துக்கரணம் அடிப்பதில் நாம் வல்லவர்கள், நம்மை நாமே சுத்தமானவர்கள் என்று கருதிக்கொள்கின்றோம். கிடைத்த நல்லவளமான வாய்ப்புக்களையும் ஆணவத்தின் விளிம்பில் ஆடியநாம், முறையாகப் பயன்படுத்த தெரியாத நாம், பொரிமாத்தோண்டியின் கற்பனையில் அடியுண்டு போகிறோம்.

நாம் இறால் போட்டுச் 'சுறா' பிடிக்கவில்லை. திமிங்கத்தை வேட்டையாடும் வேட்கையில் 'சுறா' போட்டு, இறால் பிடித்தோம். பிடித்த இறாலுக்கும் சொந்தம் பாராட்டி, நமக்குள் நாமே நையப்புடைபட்டபோது நெறிகெட்டுப் போன ஒரு காட்டு அலியனை, ஊருக்குள் நுழைவதற்குள் பச்சைக்கொடி காட்டியவர்கள், கொடுவாள் சிங்கத்தை நமது காட்டிற்குள் வேட்டையாடவிட்டவர்கள்.

"உங்களை விசாரணை செய்யுங்கள் - அல்லதுபோகில்
வரலாறு உங்களை விசாரணை செய்யும்!
உங்கள் குற்றங்களை, கேடுகளை
விசாரணை செய்யுங்கள் - அவைகளை
விட்டுவிடுங்கள்!
கல்நெஞ்சம் படைத்த கபோதிகளே!
குருட்டுவழிகாட்டிகளே!
இரண்டு எசாமான்களின்
விசுவாசமற்ற ஊழியர்களே!
நீங்கள் மனம் திருந்தியவர்கள் என்பதை
செயல்களால் நிரூபியுங்கள், இல்லையேல்

நற்கனிகொடாத மரங்களைப் போல்

வெட்டுண்டு நெருப்பிலே போடப்படுவீர்கள்''

என்று வரலாறு நம்மை, மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறது.

## இணக்கமும் பிணக்கமும்

இந்த நாடகப் பிரதியை, அச்சேற்றுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பாக, சிலரிடம் படிக்கக்கொடுத்தேன். நன்றாக இருக்கிறது என்று சொன்னவர்களின் நெஞ்சுக்குள், இணக்கமும் பிணக்கும் இருப்பதை என்னால் உணரமுடிந்தது. இருவரிடம் மதிப்புரைக்காக கொடுத்திருந்தேன். அவர்களிடமும் மதிப்புரை பெறமுடியவில்லை. தனித்தமிழ்த்தேசிய நாட்டமும், சார்புநிலையும் அதற்குக் காரணம் என்பதை உணரமுடிந்தது.

இந்த நாடகப் பிரதியின் முதல்பக்கத்திலிருந்து நடுப்பகுதிவரை, படித்தால் சமூகப்பிரச்சினை பற்றிய உள்ளடக்கத்தை உணரமுடியும். நடுப்பகுதியிலிருந்து, அதாவது வாத்தியார் எலியின் வருகையோடு அது தேசியம், வர்க்கம், சாதியம் என்று இன்னொரு தளத்தில் மிகவும் அழுத்தமான விமர்சனப்பாங்கான உரையாடல்களுடன் செல்கிறது. இந்தப் பின்பகுதி பலருக்கு, மேட்டுக்குடி அரசியல் தமிழ்த்தேசியச் சார்புநிலை எடுத்தவர்களுக்கு, உவப்பானது அல்ல என்பது தெளிவு. சாார்புநிலை, உயிர்போனாலும் தன்னை விசாரணை செய்யாது. விசாரணை செய்யப்படுவதையும் விரும்புவதில்லை.

எனவே, இந்த நாடகப்பிரதியின், உருவம் உள்ளடக்கம், உணர்த்தும் முறை இவைகளை ஆக்கபூர்வமான விமர்சனத்திற்கு உட்படுத்தும்படி வாசகர்களிடம் முன்வைக்கின்றேன்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்,
வி.ஜெகநாதன்
தொ.இல. : 0094776443593

# நன்றியுரை

**"குணம் மாறும் எலிகள்"** என்ற இந்த நாடகப்பிரதியின் முன்னுரையில் சிறுவர் நாடகம் என்று குறிப்பிடப்பட்டதையும், அதுதொடர்பான விடயத்தையும் மாற்றம் செய்யாமல், அப்படியே விட்டிருக்கிறேன். இது சிறுவர் நாடகமா? இல்லையா? என்ற கேள்விகளுக்கு எனது என் உரையில் பதிலளித்திருக்கின்றேன்.

இந்நாடகப் பிரதிக்கு இருவர் மதிப்புரை தந்திருக்கின்றார்கள். ஒரு படைப்பாளியின் ஆக்கத்திற்குச் சாதகமாக மதிப்புரை எழுதவேண்டும் என்பதும், எதிர்பார்ப்பதும் தவறாகும். ஆனால் மதிப்புரை ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பது முக்கியமானது. களைபிடுங்குவது பயிரை வளர்ப்பதற்கு என்பது போன்றது மதிப்புரை.

சார்பு நிலைக்கு அப்பால் சரியானதைப் பார்ப்பதும், அதை ஏற்றுக்கொள்வதும், எடுத்துச் சொல்லும் உயர்ந்த மனப்பாங்கு. இந்த மனப்பக்குவம் எல்லாருக்கும் வாய்ப்புடையதன்று. ஏனெனில் சிலர் சார்புநிலையிலிருந்தே விடயங்களைப் பார்க்கிறார்கள். சரியான பக்கம், உண்மையான பக்கம் என்பது சார்புநிலை அற்ற சார்புநிலையாகும். இந்தவகையில் மதிப்புரை தந்தவர்கள் சார்புநிலை அற்ற சார்புநிலையானவர்கள்.

திரு.வ.மோகநாதன் அவர்கள், நாடகம் துறையில் கணிசமான தடங்கள் பதித்தவர். நாடக எழுத்தாளர்., பத்திரிகையாளர், நடிகர், நெறியாளர் என்ற பரிணாமங்களைக் கொண்டவர். இவர், சிறுவர்நாடகம் என்ற வரையறைக்குள் நின்று 'குணம்மாறும் எலிகள்' பிரதிக்கு மதிப்புரையை வழங்கியுள்ளார்கள். இதன் உருவம், உள்ளடக்கம், உணர்த்தும் முறை பற்றி, மேலோட்டமாக, ஆனால் கடுகுமணி போல் காரமாகச் சொல்லியிருக்கிறார். அவருக்கு எனது உளப்பூர்வமான நன்றி.

திருக.சத்தியசீலன் அவர்கள் தனது மதிப்புரையை தந்துள்ளார். மலையத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்தக் கலைஞர், யாழ்ப்பாணத்தை

வாழ்விடமாக, குறிப்பாக நீர்வேலியை வாழ்விடமாகக் கொண்டவர். பத்து ஆண்டுகளுக்கு மேலாக, பல நாடகக் களங்களில் கால்பதித்தவர். இவர் நாடக ஆசிரியராக, நெறியாளராக, நடிகராக, "செம்முகம்" கலைக்குழமத்தின் ஆற்றுகையாளராக விளங்குகிறார்.

இவரது மதிப்புரையும் சிறுவர் நாடகம் என்ற கட்டத்திற்குள் இருந்தே நோக்கப்பட்டிருக்கிறது. **'குணம்மாறும் எலிகள்'** நாடகப் பிரதியின் உள்ளடக்கத்தை சற்று விரிந்த தளத்தில், மிக அழுத்தமாக, குன்றிமணிபோல சுருக்கித் தந்துள்ளார். அவருக்கு எனது உளம்கனிந்த நன்றி உரித்தாகுக.

இந்த நாடகப்பிரதியை, கணினிப்படுத்தி அட்டைப்படத்தை அர்த்த சக்தியோடு, அழகுற வடிவமைத்துத் தந்த சக்தி வெளியீட்டகத்திற்கும், குறிப்பாக செல்வி.பிரதா சிவனேஸ்வரன் அவர்களுக்கும் எனது நிறைவான நன்றியை நவில்கிறேன்.

உரும்பிராய்
வி.ஜெகநாதன்

# குணம் மாறும் எலிகள்

சிறுவர்களால் ஆற்றப்படுவது சிறுவர் நாடகம் ஆகும். இந்தச் சிறுவர் நாடகம் சமுதாயத்திற்கு காத்திரமான கருத்தியலை வெளிப்படுத்தவும் அகச்சூழல் மற்றும் புறச்சூழல் ஆகியவற்றின் தன்மையை உணர்ந்து மனிதர்கள் தங்கள் சிந்தனையை மாற்றுவதற்கும் ஓர் உந்துதலை அளிக்க வல்லது.

கனதியான உள்ளடக்கத்தை சிறுவர் நாடகம் கொண்டிருப்பது ஒரு வரம்பு மீறிய செயலாக கருதமுடியாது. அப்படி சிறுவர் நாடகத்திற்கு வரம்பிடுவது பொருத்தமானதாக தோன்றவில்லை.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைக்போல்
கலைப்பெருக்கம் கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடர் எல்லாம்
விழி பெற்றுப் பதவிகொள்வார்"

- பாரதி

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகை வேரோடு சாய்ப்போம்
அறிஞர் தம் இதய ஓடை, ஆழநீர் தன்னை மென்று
செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி
ஊற்றி"

- பாரதிதாசன்

**கலை இலக்கியத்தின் இந்த இலட்சியத்தை நோக்கி "குணம் மாறும் எலிகள்"**

**சமூக, அரசியல், பொருளாதார நாடகம்**

**எழுத்துரு: உரும்பிராய், வி.ஜெகநாதன்**

## அரங்க தரிசனம்

1. இது முழுக்க முழுக்க ஒரு வீட்டுக்காட்சி. எலிகள் நடமாடுவதற்கு ஏற்ப மேடை காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
2. மேடையின் மத்திக்கு சற்று பின்னாக, மேடையின் வசதிக்கு ஏற்ப நாலடி உயரமான சுவர் அமைக்கப்பட்டதாகக் காட்சிப்படுத்த வேண்டும். ஆனால் சுவர் பலமானதாக இருக்க வேண்டும்.
3. இந்தச் சுவர் ஒன்பது அடி நீளமானதாக இருக்க வேண்டும்.
4. எலிகள் சுவரிற்கு மேலாக பார்ப்பதும். சத்தம் செய்வதும் வீட்டில் யாரும் இல்லாத வேளைகளில், சுவரின் இரு பக்கங்களாலும் சுவரின் முன்புலத்திற்கு வந்து, (எலி போன்ற பாவனையில்) அங்குமிங்கும் பரபரப்புடன் பார்ப்பது, ஓடுவது, விளையாடுவது, அச்சப்படுவது, கடிபடுவது, பொருட்களைக் கொறிப்பது போன்று ஒரு நெகிழ்வுத் தன்மையான பாவனையை வெளிப்படுத்த வேண்டும்.
5. எலிகளின் இந்த ஆற்றுகை, மங்கிய மஞ்சள் நிற ஒளியில் எலிகளின் அசைவுகள், நடமாட்டங்களைப் புலப்படுத்தும் வகையில் பின்னிசை அமையவேண்டும்.
6. தனித்தும் இரண்டாகவும் மூன்றாகவும் எலிகளின் நடமாட்டம் ஒருசில கணத்துளிகள் நீடித்து, எலிகள் அசையா நிலையில் நிற்க மேடையின் வலது பக்கத்தில் இருந்து உரையாளி ஒன்று, மேடையின் முன்புலத்திலிருந்து வந்து பேசுதல்.

உரையாளி : உயிர்களின் இருப்பு, வாழ்வு எல்லாமே இந்த மண்ணில்தான். மண்ணையும் உயிர்களையும் பிரிக்கமுடியாது. செம்புலப்பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தவனவாய் இந்த மண்ணில், நமது சொந்த மண்ணில் நமது வாழ்வு இரண்டறக்கலந்துள்ளது.

**இப்பொழுது உரையாளி 1 கலங்கியபடி கீழே குனிந்து நிலத்திலே ஒரு பிடி மண்ணை அள்ளுவது போல பாவனைசெய்து, அந்த ஒருபிடி மண்ணைச் சபையோருக்குக் காட்டி........**

இதுவெறும் மண்ணல்ல. இதற்குள் எமது உயிர் இருக்கிறது. எமது வாழ்வு இருக்கிறது. முப்பாட்டன் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து இந்த மண்ணுக்குள் நமது அடையாளங்கள் புதைந்துள்ளன. நமது வாழ்க்கை வழிபாடும், பண்பாடும், விழுமியங்களும், கலை இலக்கியங்களும், நம்பிக்கைகளும் உயிரோடு கலந்துள்ளன.

வான்பொய்ப்பினும், குளம் குட்டைகளின் வயிறுகள் வெடிப்பினும், ஓடைகள் வெண்மணல் கொழிப்பினும், கிணறுகள், கேணிகள் வற்றிப்போயினும், சுண்ணக் கற்பாறையில் ஊறும் நீர் உப்புக்கரிப்பினும், நீரின் ஆழத்தின் அடியில் கழிவு ஓயில் கலக்கப்படினும், எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் இந்த மண்ணோடுதான் என்று சங்கே முழங்கு!

**இப்பொழுது உரையாளி 1 அசையா நிலையை அடையும் அதே வேளையில் உரையாளி 2 மேடைக்கு வந்துகொண்டு.......**

உரையாளி 2 : (மேடையின் பக்கவாட்டில் கையைக் காட்டி)
இதோ! இந்த ஓசை உங்களுக்குக் கேட்கிறதா? அந்நியர் வந்து காலால் மிதித்து உளக்கும் வேதனையில் அலறுவது கேட்கிறதா? தனது பிஞ்சுக்குழந்தைகள் கடத்தப்படுவதால் கதி கலங்கி ஒப்பாரி வைப்பது கேட்கிறதா? இந்த அபலைப் பெண்ணின் பிள்ளைகள், அவளை நம்பி வாழ்பவர்கள், வீதியில் அலைந்து, விம்முவது கேட்கிறதா? கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்! பார்க்கக் கண்ணுள்ளவன் பார்க்கட்டும்!

**இப்பொழுது உரையாளி 2 : கீழே குனிந்து ஒரு சிறங்கை உப்புத்தண்ணீரை அள்ளி எடுப்பதுபோல் பாவனை செய்து அதை சபையோருக்குக் காட்டி அதை நிலத்திலே சிந்திவிட்டு.....**

இது! வெறும் உப்புத்தண்ணீர் அல்ல, உயிரின் உயிரான நமது கடல் அன்னை. இன்று அவளுடைய சொந்த மக்கள் அவளுக்கு அந்நியமாக்கப்பட்டுள்ளனர். சுவைமீன் பிடித்து மகிழ்ந்து வாழ்ந்தவர்கள் படும்அவலமும் சிறுமையும் தெரிகிறதா? சிந்திடும் கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சிந்தியுங்கள். தீவினை ஒழிந்து போகச் சிந்தியுங்கள்.

**உரையாளி 2 அசையா நிலை அடைய உரையாளி 1 அசைவுபெற்று .........**

உரையாளி 1 : (அசைவுபெற்று) கூடுகள் பிரிக்கப்பட்ட காக்கைகள் கூட்டமாய், இருக்கைதேடி அலைபவர்கள், காகக்கூடுகளில் பொரிக்கப்பட்ட குயில்குஞ்சுகளை விடவும் அகதி முகாம்களில் அவலப் படுபவர்கள், சொந்த நிலத்திற்கு உரிமைகோரி போராட்டம் நடத்துபவர்கள், உங்களை சிந்திக்கும்படி அழைக்கிறார்கள்! செயற்பட வரும்படி கரம் நீட்டுகிறார்கள்.

உரையாளி1,2 : (சேர்ந்து) வாழ்வு தந்த கடலும், வளம்படைத்த மண்ணும் களவாடப்பட்டதற்கு எதிராக சிந்திக்கவும் செயல்படவும் அழைக்கிறார்கள்.

**அசையா நிலையில் நிற்கும் எலிக்கூட்டத்தைச் சுட்டிக்காட்டி......**

இதோ! இதோ! இதோ!

**இப்பொழுது உரையாளிகள் 1, 2 : மேடையை விட்டுப்போனபின், எலிகள் அசைவுபெற்று அங்குமிங்கும் ஓடித்திரியும் வேளையில் வீட்டின் இல்லாள் கையில் விளக்குமாறுடன் மேடையின் முன்புலத்திற்கு வரவும் எலிகள் எல்லாம் விழுந்தடித்து ஓடி, சுவரின் பின்புலத்தில் ஒளிய இல்லாள் பேசுதல்.**

இல்லாள் : சூ.......! சூ.......! சூ.........!
அநியாயப்பட்ட எலியள். ஒரு பொருள் வைச்சு எடுக்கேலாமல் இருக்கு. இதுகள் அடங்கமாட்டுதுகள். திரும்பவும் பூனையைக் கொண்டுவந்து விட்டால்தான் இதுகளின்ர கொட்டம் அடங்கும்.

**இப்பொழுது இல்லாள் விளக்குமாற்றால் வீட்டைப் பெருக்குவதைப்போல பாவனை செய்துகொண்டு இருக்க, எலிகள் சுவரின் மேலால் எட்டிப்பார்த்துச் சத்தம்போடுதல்.**

எலிகள் : ப்யூப்......... ப்யூப்......... ப்யூப்.........

**இப்பொழுது இல்லாள் எலிகளை எச்சரிப்பதற்காக பூனைபோல் கத்துதல்.**

இல்லாள் : மியா.......! மியா....! மியா.......!

**இல்லாள் வீடுபெருக்கி முடிந்ததும் ஒரு வெறுப்புணர்வோடு மேடையை விட்டுப்போனபின், எலிக்குஞ்சு ஒன்று சுவரின் வலது பக்கத்தால் முன்புறத்திற்கு வந்து அங்குமிங்கும் ஓடித்திரிய, சுவரின் பின்புலத்திலுள்ள தகப்பன் எலி சுவருக்கு மேலாக எட்டிப்பார்த்துப் பேசுதல்.**

தகப்பன் எலி : எலிக்குஞ்சா! கவனம் இல்லாமல் ஓடித்திரியிறாய்! அவசியம் இல்லாமல் மாட்டுப்படப் போறாய்!

எலிக்குஞ்சு : (தலையை மட்டும் பின்பக்கம் திருப்பி) அப்போய், உங்களுக்குப் பயமெண்டால் பேசாம இருங்கோ! எல்லாம் எனக்குத் தெரியும்.

**என்று சொல்லி எலிக்குஞ்சு துள்ளிக்குதித்து குடுகுடு என்று ஓடி வட்டமடித்து நிற்க....... தகப்பன் எலி**

தகப்பன் எலி : கெடுகுடிசொல் கேளாது. இளம் இரத்தம் அப்பிடித்தான் சொல்லும். வீணாக......

எலிக்குஞ்சு : (செல்லக்கோபத்துடன்) சும்மா இருங்கோ அப்பா! என்னைப் பயந்தாங்கொள்ளி ஆக்க வேண்டாம்.

**இப்பொழுது சுவரின் பின்புலத்தில் ஒளிந்திருக்கும் எலிகள் சுவரின் இரு பக்கத்தாலும் முன்புலத்திற்கு வந்ததும் தகப்பன் எலி பேசுதல்.**

தகப்பன் எலி : எல்லாருக்கும் சொல்லுறன், கண்ணுக்க எண்ணெய் விட்டமாதிரி இருங்கோ!!

எலி 2 : கேவலம், இந்த அரைச்சாண் வயித்துக்காகத் தானே இத்தினை அவலம்?

தகப்பன் எலி : இது வெறும் வயிற்றுப்பிரச்சினை இல்லை. எங்கடை இருப்புக்கான பிரச்சினையும்தான். சேத்துவாய்க்காலுக்க காலைப் புதைத்துப்போட்டு சில்லெடுக்கிறம்.

எலி 1 : எங்கட பிரச்சினை சிக்குப்பட்ட நூற்பந்துமாதிரி! என்னைப்போல எத்தனைபேர் சொந்தநிலம் இல்லாமல் அகதிமுகாமில் அவலப்படுகினம்? எத்தனைபேர் இரவல் காணியில் கொட்டில் கட்டிக்கொண்டு இருக்கினம். ஒரு வீட்டுக்க இரண்டு, மூண்டு குடும்பங்கள் இருக்கிற அவலமும் அருவருப்பும் இருக்கு...

தகப்பன் எலி : எதிர்காலத்தில தான் நிலப்பிரச்சினை நெருப்பெடுக்கப் போகுது.

எலி 1 : நலன்புரி நிலையம் என்ற பெயரில நீண்டகாலம் எங்கள வைச்சிருந்து எங்கட வாழ்க்கையை நலமடிக்கினம்.

எலி 3 : என்ன அண்ண? வாழ்க்கைய நலமடிக்கலாமோ?

எலி 2 : நலமடிக்கிறது என்னத்துக்கு? அதிகாரத்தில உள்ளவே தங்கட கட்டுப்பாட்டில எங்கள வைச்சிருக்கத்தான். இந்த நரகமுகாம் வாழ்க்கைக்கு ஒரு முடிவில்லையே? ஏன், எங்களை நீண்டகாலம் அகதிமுகாமில் வைச்சிருக்கினம்.

எலி 1 : ஏனோ?..... சரியான அன்பிலதான்.

**சில எலிகள் சிரித்து ஓய**

எலி 2 : என்ன பகிடி விடுறியள்?

எலி 1 : இது பகிடியே? எங்கள என்னத்துக்கு அகதிமுகாமில வைச்சிருக்கினம் எண்டு தெரியாதோ?

தகப்பன் எலி : தம்பி, உன்ர மனவேதினை எனக்கு விளங்குது. எங்கட சனங்கள அகதிமுகாமில வைச்சிருந்தால்தானே சருவலோகத்திற்கு தமிழற்ர பிரச்சினையைக்காட்டி

போராட்டம் நடத்த, எங்கட பெருங்குடித் தலைமைகளுக்கு வசதியா இருக்கும்.

எலி 5 : இந்த மாந்தீவில ஒட்டுமொத்தமாக **த.மு.சி.**களுக்கு பிரச்சினை வந்தது உந்த நாசமாப்போன சருவலோலனுகளாலதான். அந்த அநியாயப் படுவாங்கள் இந்த மாந்தீவிற்கு வரமுந்தி **த.மு.சி**கள் தங்களுக்குள்ள சண்டை பிடிச்சாலும் உரிமை சுதந்திரத்தோடதான் வாழ்ந்தவே.

எலி 3 : அண்ண தமுசி எண்டா என்ன?

எலி 5 : அட இந்த மாந்தீவில வசிக்கிறவேதான்.

**கைவிரல்களில் த... மு... சி... என்று அழுத்தி அபிநயித்து**

எலி 3 : அப்படியோ? நல்லா விளங்கிப் போச்சு.

எலி 5 : உனக்கும் விசயம் விளங்குது? பிறகென்ன?

**சில எலிகள் சிரித்து ஓய**

எலி 1 : எங்கட பாரம்பரிய மண்ணில பாலும் தேனும் பாய்ஞ்சு ஓடவேணும் எண்டு, தண்டு தட்டி எடுத்தவ எல்லாரும்தான் எங்கள தண்டல் சோறு தின்னிகளாக மாற்றிப் போட்டினம். இனி நாங்கள் என்ன செய்ய?

தகப்பன் எலி : செய்யலாம்! ஒரு தடவைக்கு ஒன்பது தடவ சேர்ந்து யோசிச்சால் செய்யலாம். இல்லாட்டிக்கு அழிவுதான்!

எலி 4 : இனி அழியிறதுக்கு என்ன இருக்கு? பூனையைப் போட்டுத்தள்ளினால் எல்லாம் சரி.

தகப்பன் எலி : அடதம்பி, எடுத்ததுக்கெல்லாம் லோ லோ மாதிரிப் பேசாத. போட்டுத்தள்ளிப் போட்டு கோவண ஆண்டிகளாய் நிக்கிறம். இதையும் இழக்கச் சொல்லுறியோ?

எலி 4 : முள்ள முள்ளாலதான் எடுக்கணும்

தகப்பன் எலி : ஓமோம், முள்ள முள்ளால எடுக்கப் போய், காலப் பழுதாக்கிப்போட்டு நொண்டி நொண்டி நடக்கிறம்.

எலி 1 : அண்ண சொல்லுறதும் சரிதான். வீட்டுக்காரி என்ன சொன்னவா எண்டு உங்கட ஒருத்தற்ர காதிலயும் விழேலையோ?

தகப்பன் எலி : எங்கட அமளிதுமளிக்க நான் அதை அவதானிக்கேல.

சில எலிகள் : (வியப்போடு) என்ன சொன்னவ? என்ன சொன்னவ?

எலி 1 : நல்ல நிவாரணம் தாறன். நக்கிப்போட்டு தனக்குப் வோட்டுப் போடச் சொன்னவ.

எலி 3 : நீங்கள் எங்களைக் கடிக்கிறியள்.

எலி 1 : அப்ப, உங்கள எல்லாம் கட்டிப்பிடிச்சுக் கொஞ்சச் சொல்லுறியளோ?

எலி 3 : என்னண்ணை பகிடிவிடுகிறியள்? என்னசொன்னவ எண்டு சொல்லுங்கோவன்.

எலி 1 : திரும்பவும் பூனையைக் கொண்டுவந்து விடப்போறாவாம்.

சில எலிகள் : (ஏக்கத்துடன்) அப்படியோ? அப்படியோ சொன்னவ?

எலி 1 : நான் என்ன பொய்யோ சொல்லுறன்? முந்தியும் பூனை செய்த அட்டூழியங்கள ஒருக்கா நினைச்சுப் பாருங்கோ, எல்லாம் விளங்கும்.

**இப்பொழுது எலிகள் எல்லாம் யோசிப்பது போல பாவனை செய்தபடி அசையா நிலையில் நிற்க, பின்னிசையில் ஒரு யுத்த சூழலின் இசை ஒருசில கணத்துளிகள் இசைக்கப்பட வேண்டும். அதன்பின் எலிகள் அசைவுபெற்று நிதானிக்க.**

எலி 4 : இதுக்கெல்லாம் ஒரேவழி பூனையைப் போட்டுத் தள்ளுறதுதான்.

**இதைக் கேட்ட எலி - 5 விரக்தியாய் சிரிக்க எலி - 4 கோபமாக.....**

என்ன நக்கலாச் சிரிக்கிறீர்? இந்த நக்கல் நளினங்கள என்னோட வைச்சுக்கொள்ளாதயும்.

எலி 5 : நீர் நினைக்கிறது பெரிய தப்பு.

எலி 4 : என்ன தப்பு?

எலி 1 : அட தம்பி நிப்பாட்டு. எடுத்ததுக்கெல்லாம் வெட்டுறன், கொத்துறன், கொல்லுறன் எண்டு சொல்லுறதே பெரிய தப்புத்தான். ஆயிரம் பூனைகளின் தலை விழுந்தாலும் எங்கட பிரச்சினை தீரப்போறதில்லை. எதுக்கும் தலையைப் பாவிக்கவேணும்.

எலி 4 : (கோபத்துடன்) என்ன தலையைப் பாவிக்க வேணுமோ?

எலி 1 : மலையோடு மோதேக்க மண்டையைப் பாவிக்க வேணும்.

எலி 5 : பூனையைக் கட்டுப்படுத்துறதெண்டால் எங்கட அகச்சூழல் மாறவேணும். புறச்சூழல கவனத்தில எடுக்கவேணும்.

எலி 4 : அதென்ன அகச்சூழல், புறச்சூழல்?

தகப்பன் எலி : தம்பி அகச் சூழல் எண்டது எங்கட சமூகத்தில இருக்கிற சிந்தனை, கொள்கை, நம்பிக்கை, முரண்பாடு, மோதல், உற்பத்தி, பொருளாதார நிலை, பண்பாடு, பலம், பலவீனம் இதுகளை இனங்கண்டு, எங்களிட்ட ஒரு அளவுமாற்றத்தை ஏற்படுத்த வேணும்.

எலி 4 : அதென்ன அளவுமாற்றம்?

தகப்பன் எலி : ஒரு மெல்லிய தடியை இலகுவாக முறிக்கலாம். ஆனால் ஒன்பது மெல்லிய தடிகளை ஒண்டாகச் சேர்த்து இறுக்கிக் கட்டினால் முறிக்கேலாது. எங்கட சமூகம் ஒரு எலியாக மாறவேணும்.

எலி 3 : அதென்னண்டு? எல்லா எலிகளும் சேர்ந்தால் கன எலி அல்லோ? அதெப்படி ஒண்டாகும்?

எலி 5 : பல உறுப்புக்கள் சேர்ந்துதான் ஒரு உடம்பு. ஒவ்வொரு உறுப்பும், வெவ்வேறு பேரில, வெவ்வேறு தொழிலைச் செய்யுது. அதால உடம்பு சரியா இயங்குது, அதுமாதிரித் தான்.

எலி 4 : அப்ப புறச்சூழல் எண்டது?

தகப்பன் எலி : இதுவும் அதுமாதிரித்தான். எங்கட பிறப்புரிமைய மறுக்கிற ஆதிக்கவாதிகளின் பலம், பலவீனம், பொருளாதாரநிலை, வெளிநாட்டுத் தொடர்பு, தந்திரம், பொறிமுறை இப்படிப் பல விஷயங்கள் இருக்கு. இதை நாங்கள் கவனத்தில எடுக்க வேணும். இல்லாட்டில் நாங்கள் தலையெடுக்க ஏலாது.

எலி 4 : நல்லா இருக்கு. கூரை ஏறிக் கோழி பிடிக்க வக்கில்லாதவன், வானத்தில ஏறி வைகுண்டம்போக நினைச்சமாதிரிதான். இதெல்லாம் ஆத்தாதவன் வெட்டிப்பேச்சு.

எலி 3 : அப்பிடிச் சொல்லாத தம்பி. ஏராளமானபேர் தங்கட சுயநலத்துக்காக, வெளியால ஓடிவிட்டினம். இங்க இருக்கிற நாங்கள் மெத்தச் சிறுபான்மையாய்ப் போனம். அதால ஏதாவது உருப்படியாய்ச் செய்தால்தான் எங்களுக்கு விடிவுவரும்.

**இப்பொழுது மேடையின் பின்னணியில் பூனை மியா! மியா! என்று கத்திக்கொண்டு இல்லாளின் பின்னால் மேடையின் முன்புலத்திற்கு வர, எலிகள் எல்லாம் விழுந்தடித்து ஓடி சுவரின் பின்புலத்தில் ஒளிய இல்லாள் பேசுதல்.**

இல்லாள் : பார்த்தீரே பூனைத்தம்பி, எலியளின்ர அட்டகாசத்த! எத்தனை எலியள் விழுகிதோ, அத்தனை தங்கப்பதக்கம் உமக்குத் தருவன். உமக்குச் சிலையும் வைப்பன். என்ர வீட்டில நான்தான் அதிகாரம் பண்ணவேணும். நான் நினைக்கிறதுதான் நடக்கவேணும்.

பூனை : எசமாட்டியம்மா, சொல்லிப்போட்டியள் அல்லோ? அதை நான் பாத்துக்கொள்ளுறன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

**இப்பொழுது பூனை மியா! மியா! என்று கத்திக்கொண்டு எசமாட்டியின் பின்னால் மேடையைவிட்டுப் போனபின் எலிக்குஞ்சா சுவரின் பக்கத்தால் முன்புலத்திற்கு வந்து கவனமில்லாமல் ஓடித்திரிய, மேடையின் பின்புலத்திலிருந்து இதை அவதானித்த பூனை, பாய்ந்து வந்து எலிக்குஞ்சாவை பிடித்து, அது கத்தக்கத்த மேடையிலிருந்து கொண்டுபோனபின் ஒளிந்திருக்கும் எலிகள் எல்லாம் கலவரப்பட்டுக் கொண்டு சுவரின் மேலால் எட்டிப் பார்க்க எலி 4 மட்டும் துணிந்து மெல்ல மெல்ல சுவரின் பின் புலத்தால் வந்து அங்குமிங்கும் நோட்டம் விட்டபின், மற்ற எலிகளைச் சைகையால் அழைக்க மற்ற எலிகள் எல்லாம் சோகம் தோய்ந்த ஒரு பாவனையோடு சுவரின் முன் புலத்திற்கு வந்ததும், தகப்பன் எலி தழுதழுத்த குரலில் சோகமாக......**

தகப்பன் எலி : எத்தினை தரம் படிச்சுப் படிச்சு சொன்னன்? காதில விழுத்தினியோ? என்ர இரண்டு பெடியங்களையும் ஏற்கனவே பலி குடுத்திட்டன். இப்ப நீயும் போட்டாய். (அழுதல்) இப்ப எனக்குக் கொள்ளி வைக்கக் கூட ஒரு பிள்ளை இல்ல.

எலி 4 : இப்ப என்ன ஆறுதல உங்களுக்கு சொல்ல? ரத்தம் கொதிக்குது. இனி என்ன செய்யலாம்.

எலி 3 : ஒண்டு செய்வம்.

எலி 4 : சொல்லும்

எலி 3 : பூனைக்கு மணி கட்டுவம்.

**இதைக்கேட்ட எலி 4 பூ என்று சிரிக்க, வேறு சில எலிகளும் சிரிக்க எலி - 3 அவமானத்தால் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நிற்க, எலி - 5**

எலி 5 : அவர் ஏதோ தெரியாத்தனமா சொல்லிப்போட்டார். இதுக்கு எல்லாரும் சிரிக்கிறதே?

**மீண்டும் சிரிப்பொலி. ஒரு சில கணத்துளிகளின் பின் எலி 5...**

எலி 5 : எங்கட எலிச் சமூகத்துக்கு ஒட்டுமொத்தப் பிரச்சினை இருக்கு. அந்த ஒட்டுமொத்தப் பிரச்சினைக்குள்ள மெத்தப் பிரச்சினைகள் இருக்கு. மெத்தப் பிரச்சினையை கணக்கில் எடுக்காமல் மொத்தப் பிரச்சினையை தீர்க்க ஏலாது.

எலி 4 : அது என்ன மொத்தப் பிரச்சினை, மெத்தப்பிரச்சினை?

எலி 3 : அண்ண நீங்கள் மொத்தப் பிரச்சினை, மெத்தப்பிரச்சினை எண்டு சொல்ல எனக்கு ரெயின் ஓடின மாதிரி இருக்கு.

எலி 4 : அதென்ன? ரெயின் ஓடுற மாதிரி எண்டா?

எலி 3 : (சத்தமாக) மொத்தப் பிரச்சினை மெத்தப்பிரச்சினை, மொத்தப் பிரச்சினை மெத்தப்பிரச்சினை (3)

சுக்கு.... சுக்கு... சுக்கு..... கூ

**எலிகள் சில சிரித்து ஓய**

எலி 5 : அட சும்மா இரு. பகிடிவிட்டுக் கொண்டு இருக்கிறா. (ஒரு சில கணத்துளிகளின் பின்) எங்கட நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கு. எங்களுக்க நிலமில்லாத ஆக்களின்ர பிரச்சினை பெரிய பிரச்சினை. விவசாயிகள், கூலித் தொழிலாளியள் பிரச்சினை இருக்கு, விவசாய நிலமும் மட்டு மீறின இரசாயன உரப்பசளை பாவிக்கிறதால பாதிக்கப்பட்டிருக்கு. தோட்ட நிலத்தில் வீடுகள் எழும்புது. கட்டுப்பாடில்லாத கிருமிநாசினிப் பாவிப்பால மனிசருக்கு வருத்தம் வருது. தண்ணிப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக மாறிக் கொண்டிருக்கு, மலட்டு விதைநெல்லை வாங்கி விதைக்கிறம். அதையும் சருவலோகத்திட்டதான் வாங்கவேண்டியிருக்கு. எங்களுக்கு தேவையான மரக்கறி விதைகளையும் அந்த நாசமாய்ப் போனவங்களிட்டதான் வாங்க வேண்டி இருக்கு. எங்கட மண்ணில தொழில் உற்பத்தி இல்லை. வேலையில்லாப் பிரச்சினை, வறுமை, பட்டினி, வெறுமை எங்கள வாட்டுது. இது எங்களுக்க இருக்கிற மெத்தப் பிரச்சினை.

எலி 2 : ஏன், எங்கட வாழ்வு தந்த கடல் வளம் என்னாச்சு? கடல நம்பி வாழுகிற மக்களின் நிலை என்னாச்சு? தேசிய இனப் பிரச்சினையை பற்றி அக்குவேறு ஆணிவேராய்ப் பிரிச்சு மேயிறவே எங்கட மெத்தப்பிரச்சினையைப்பற்றி மூச்சுவிடாம இருக்கினம்.

எலி 1 : எப்பிடி மூச்சு விடுவினம்? இந்தப் பிரச்சினையை கையில் எடுத்தால், தங்கட வசதி வாய்ப்பு, சொகுசு வாழ்க்கை இல்லாமல் போய்விடும் எண்டு எங்கட தலையள் மௌனவிரதம் இருக்கினம்.

எலி 2 : ஓமோம்! முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வடக்க தலைவைச்சுப் படுக்காதவே, வெளியால இருந்து நல்லாச் சம்பாதிச்சவே, இவ்வளவு காலத்துக்கு பிறகு காணி உறுதியோட வந்து நிற்கினம். எங்கள எழும்பச் சொல்லினம். அல்லது காசுகுடுத்துக் காணிய வாங்கச் சொல்லினம்.

அன்றாட வாழ்க்கைக்கே மாடாய் உழைச்சு ஓடாய் தேயிற நாங்கள் மலை மாதிரி விலைக்கு காணி வாங்க ஏலுமோ? வெளிநாட்டில இருந்து வந்தவே என்ன விலை குடுத்தும் காணி வாங்கத் தயாரா இருக்கினம்.

எலி 1 : அதிகாரத் தரப்பார் விட்டுக்குடுத்த காணியில், காணி வைச்சிருக்கிறவே போயிருக்க தயக்கம் காட்டினம். காணி இல்லாத சனங்களுக்கு குடுக்கவும் மாட்டினம். இது தான் அவேன்ர தேசியப்பற்று. ஆரிட்டச்சொல்லி அழ?

எலி 2 : என்னதான் செய்ய முடியும்?

எலி 1 : எங்கட வாத்தியார் ஐயா சிந்திக்கக் கூடிய நல்ல மனிசன். நாலும் தெரிஞ்சவர். நாலுபேரோட உறவுள்ள மனிசன். நாணயமானவர், அவரிட்ட ஆலோசனை கேட்டுப் பாப்பம்.

எலி 4 : (எரிச்சலுடன்) உந்த கதையை விடுங்கோ. அவர் சும்மா தத்துவம் பேசிக்கொண்டு இருப்பர். இதெல்லாம் சாத்தியப்பட்டு வராது. (அழுத்தமாக) கொல்! அல்லது கொல்லப்படு! இது தான் எங்களுக்கு அவசியம்!

எலி 5 : என்னதம்பி? மண்டையன் குழுமாதிரி பேசுறா (அழுத்தமா) கொண்டு குவிக்கிறதுக்காக, வீரச்சாவு சாகிறதுக்காக, இழக்கிறதுக்காக, எங்களை நாங்களே அழிக்கிறதுக்காக நாங்கள் போராடேல. எங்கட நோக்கம் எங்களை அடிமைப்படுத்துற சக்திகளை அழிக்கிறதில்லை. எங்கட சுதந்திரத்த, எங்கட அடையாளத்த நாங்கள் வெல்லிறதுதான். காட்டுமிராண்டிச் சண்டை எங்களுக்கு வேண்டாம். (அழுத்தமாக) அறப் போர்! அகிம்சைப் போர்! இதைத்தான் வரலாறு எங்களுக்கு படிப்பிச்சிருக்கு! அநியாயமாச் சிந்தப்பட்ட ரத்தம் சும்மா இராது! நியாயம் கேக்கும்! கூலி கேக்கும்! தன் வினை தன்னைச் சுடும்! இது இயற்கை தீர்ப்பு! சிந்திக்காட்டி கேடு எங்களுக்குத்தான்!

**இந்தப் பேச்சினால் அடியுண்டு போன எலிகள் ஒரு சில கணதுளிகள் மௌனத்தில் ஆழ்ந்து போயிருக்க, தகப்பன் எலி.....**

தகப்பன் எலி : எதுக்கும் வாத்தியாரிட்ட கேட்டு பாப்பம். அவர் சொல்லுறபடி...

எலி 4 : தாளம் போடவேனும் எண்டு சொல்ல வாறியள்?

தகப்பன் எலி : என்ர அபிப்பிராயம் அது இல்ல.

எலி 4 : அப்ப என்ன சொல்லவாறியள்?

தகப்பன் எலி : ஆர் சொல்லுறது எண்டதல்லப்பிரச்சினை. ஆர் என்ன சொன்னாலும் அதை எங்கட பகுத்தறிவால அளந்து பாக்கவேனும். கண்முடித்தனமாக ஏற்கிறதும், எழுந்தமானத்தில, அகம்பாவத்தில, பொறாமையில மறுக்கிறதும், நிராகரிக்கிறதும் நல்லதில்ல.

எலி 3 : அய்யா! என்னண்டு அளந்து பாக்கிறது? தராசாலயோ?

**இதைக் கேட்ட சில எலிகள் சிரித்து ஓய**

தகப்பன் எலி : எட சும்மா இரு. ஆட்டுக்க மாட்ட விடாத. எங்கட எதிரி, எங்களைச் சாராதவன், சொல்லுறதில நீதி நியாயம் இருந்தால், நாங்கள் அதை மனங் கொண்டு சிந்திக்க வேணும். அவசியம் வளஞ்சு குடுக்கிற இடத்தில் வளஞ்சு குடுக்காட்டி முறிஞ்சு அழிய வேண்டியதுதான்.

எலி 5 : ஆனால்....

எலி 2 : என்ன ஆனால் எண்டு இழுக்கிறீர்?

எலி 5 : வாத்தியார் ஒரு கறாரான ஆள். அதிலயும் இந்தக் கதிரைக்கு பினைபடுகிறவையைக் கண்ணில காட்டவே ஏலாது.

எலி 3 : அண்ண குறை நினைக்க வேண்டாம். கதிரைக்கு பினைபடுறது எண்டால்?

எலி 1 : கதிரையில் அவ்வளவு ஆசை!

எலி 3 : ஏன் கதிரைக்கு ஆசைப்பட்டுப் பினைபடினம்? காசு குடுத்தால் வாங்கலாந்தானே.

எலி 5 : உம்முடைய கேள்வியிலயும் நியாயம் இருக்கு. சனங்களிட்ட கஷ்டம் இருக்கு, அறியாமை இருக்கு, மூட நம்பிக்கை இருக்கு, சுயநலமும் இருக்கு. கையில காசு, வாயில தோசை. துட்டு! துட்டு இருந்தால் பா.உ. கதிரைகளை வாங்கலாம் எண்டநிலைதான். நாசமாப் போன இந்த கதிரைக்கனவாலதான் நாங்கள் இண்டைக்கு கதிகலங்கிப்போய் இருக்கிறம். அடிப்பட்டுக்கொண்டு இருக்கிறம்.

எலி 3 : அப்ப, கதிரை கனவு கண்டால் அடிபாடு வருமோ?

எலி 5 : அடிபாடு என்ன? கொலையும் விழும்!

எலி 3 : அய்யய்யோ! எனக்கு கதிரைக்கனவே வேண்டாம்! என்னால அடிபட ஏலாது.

எலி 5 : கதிரைக்கனவு வந்தால் கோவில் நிர்வாகத்திலும் அடிபிடிதான், சனசமூக நிலையத்திலும் சண்டைதான்.

எலி 2 : உந்தக் கதிரைக் கனவை நிப்பாட்டுங்கோ. வாத்தியார் நாங்கள் கூப்பிட்டா வருவாரோ?

தகப்பன் எலி : அதைப்பற்றி நீங்கள் யோசிக்க வேண்டாம். அவரைக் கூட்டிக்கொண்டு வாறது என்ர பொறுப்பு.

**இப்பொழுது மேடையின் பின்புலத்தில் பூனை மியா! மியா! என்று கத்த எலிகள் விழுந்தடித்து ஓடி, சுவரின் பின்புலத்தில் ஒளிய, எலி - 4 மட்டும் பிடிவாதமாக நிற்க தகப்பன் எலி, எலி 4 ஐ பார்த்து........**

தம்பியா நில்லாமல் ஓடியா! அவசியம் இல்லாம மாட்டுப்படாத. உனக்கு பெரிய வேலையள் இருக்கு! சொல்லக் கேள், ஓடி வா!

**இப்பொழுது எலி - 4 ஓடிச் சென்று சுவரின் பின்னால் ஒளிய, பூனை மீண்டும் மியா மியா என்று கத்திக்கொண்டு மேடையின் முன்புலத்திற்கு வந்து, அகங்காரத் தோரணையில் ஒருமுறை வட்டமடித்தது.....**

பூனை : மியாவ்! மியாவ்! மியாவ்!
வந்தேறி எலிச்சாதி
உரிமைக்கு சன்னதமோ?
பந்தாடி யாவரையும்
பருந்துக்கு இரையாக்கி
வீரத்தில் முடிசூடும் பூனைக்கு நிகரோ நீர்?
மியாவ்! மியாவ்! மியாவ்!
அடங்கி ஒடுங்கி
ஓடித்தப்புக!
உரிமை சுதந்திரம்
சமத்துவம் கோரிட
நெஞ்சத்துணிவோ!
கொடுவாள் அரியன

படுகொலை புரிந்து
வேரோடு வேரடி
மண்ணுமில்லாமல்
துடைத்து எறிகுவேன்
ஓடித்தப்புக! ஓடித்தப்புக!

**மீண்டும் பூனை மியாவ் மியாவ் என்று கத்திக்கொண்டு மேடையை விட்டுப் போன பின், சுவரின் பின்புலத்தில் தகப்பன் எலி உரத்த குரலில்........**

தகப்பன் எலி : எல்லாரும் கேளுங்கோ! நாளைக்கு காலை 8 மணிக்கு வாத்தியார் எங்களைச் சந்திக்க வருவர். நானும் அவரோட தான் வருவன். நேரம் முக்கியம்.

எலிகள் : (உரத்த குரலில்) ஓமோம்!

தகப்பன் எலி : சூழ்நிலை தெரியும் தானே?

எலிகள் : ஓமோம்! விளங்குது.

தகப்பன் எலி : தம்பியா! எல்லாத்தையும் கவனிச்சுக்கொள்.

எலி 4 : ஓமோம், பயப்பிடாதயிங்கோ!

**இப்பொழுது தகப்பன் எலியையும் வாத்தியார் எலியையும் தவிர மற்ற எலிகள் எல்லாம் எலி - 4 இன் வழிகாட்டலில், சுவரின் முன்புலத்திற்கு எச்சரிக்கையுடன்வர எலி - 4 இரண்டு எலிகளை மேடையின் இரு பக்கத்திலும் ஒவ்வொன்றாக நிறுத்தி, பூனையின் நடமாட்டத்தை அவதானிக்கும்படி சைகையால் விளங்கி, வாத்தியார் எலிக்காக மிக எச்சரிக்கையுடன் காத்திருக்க, ஒருசில கணத்துணிகளின் பின் எலி 5 தனது கைவிரல்களில் 8 மணியை விரித்துக் காட்ட, மற்ற எலிகள் எல்லாம் பரபரப்படைய, காவலுக்கு நிற்கும் எலிகள் எச்சரிக்கையுடன் நோட்டம் விட, வாத்தியார் எலியும் தகப்பன் எலியும் சுவரின் பின் பக்கத்தால் முன்புலத்திற்கு வந்ததும்........**

வாத்தியார் எலி : எல்லாருக்கும் வணக்கம்!

எலிகள் : (வாத்தியாரைப் பார்த்து) வணக்கம் வாருங்கோ!

வாத்தியார் எலி : நாங்கள் ஒரு நெருக்கடியான நிலையில கூடியிருக்கிறம். எலிக்குஞ்சாவின் தகப்பன் எல்லாத்தையும் சொன்னவர்.

எலி 5 : வாத்தியார் அய்யா, இனி நாங்கள் என்ன செய்ய வேணும்?

வாத்தியார் எலி : தம்பியவே நாங்கள் பூனையை வெல்ல முடியாமல் போனதற்கு என்ன காரணம் எண்டதை முதல்ல கண்டுபிடிக்கவேணும்.

**எலி - 4 ஐ தவிர மற்ற எலிகள் வாத்தியார் சொல்வதை ஆமோதிப்பது போல பாவனைசெய்ய, வாத்தியார் எலி தொடருதல்........**

வாத்தியார் எலி : எங்கட ஏகபோகத் தலைமைகள் ஆளுக்கொரு திக்கில நிண்டு மல்லுக்கட்டினம். சனங்களின்ர நன்மை கருதி கொஞ்சமாவது ஒரு இணக்கப்பாட்டுக்கு வரத் தயாராக இல்ல. எங்கட மக்களின்ர எதிர்கால நலனுக்காகச் சாத்தியமாகக்கூடிய எந்தக் கொள்கையோ, வேலைத் திட்டமோ அவையளிடம் இல்ல. இண்டைய **த.மு.சி.**க் கட்சிகளின் பெரிய மூலதனமாய் இருக்கிறது, இனவாதமும் மதவாதமும்தான். இந்த இனவாதம் இல்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வரஏலாதுஎண்ட மோசமான நிலைதான் இருக்கு. இந்த உத்தியை, தந்திரத்தை **த.மு.சி.**த் தலைமைகள் நல்லாய்த்தான் புரிஞ்சு வச்சிருக்கினம்.

இந்த ஒரு விசயத்தில மட்டும் **த.மு.சி.**களுக்க ஒரு உடன்பாடு இருக்கு. இதுபெரும் ஆபத்தானது. இந்த இனவாதநெருப்பை அணையவிடாமல் வச்சிருக்கிறதில சர்வலோலனுகளுக்கு பெரியபங்கு இருக்கு.

எலி 5 : ஐயா, குறுக்க பேசுறதுக்காக மன்னிக்கவேணும்.

வாத்தியார் எலி : பரவாயில்ல. நல்லதுதான் சொல்லும்.

எலி 5 : காலங்காலமாக வறிய விவசாயிகள், விவசாயக் கூலிகள் இன்னும் வெவ்வேற கூலி வேலைசெய்யிற தொழிலாளர்கள், நிலமில்லாத சனங்கள், தங்கட பொன் வாக்குகள மேட்டுக்குடி அரசியல் கட்சிகளுக்கு போட்டுக் கண்ட பலன் என்ன? இந்தச் சனங்களின்ர கஷ்டம் தீர்ந்ததோ? நிலமில்லாத அவலம், அகதிமுகாம் அருவெருப்பு, வறுமை, வருணப்பாகுபாட்டு இழிவு, இல்லாமல் போனதோ? இன்னமும் சுடலைக்கு பக்கத்தில இருந்துகொண்டு, நச்சுக் காத்தை சுவாசிச்சு, நோய்வாய்ப்பட்டு, மனக்கிலேசம் அடைஞ்சு அவலப்படுகிற துன்பம்தீர்ந்ததோ? இந்தச் சுடலை பிரச்சினை எங்கட கஷ்டப்பட்ட சனங்களின்ர குடியிருப்புக்க தான் நெருப்பாய் எரியுது. ஆனால் நாங்கள் போட்ட வாக்கில சொகுசாய் வாழிறவே இந்தப் பிரச்சினையைக் கணக்கில எடுக்கினமோ? நூற்றாண்டு காலமாகவும் ஏழைச் சனங்களின்ர குடியிருப்புப்பாதை போடப்படாத அவலம் இருக்கு. இப்பவும் கழிப்பறை வசதி இல்லாமல் அவலப்படுகிற, அசிங்கப்படுகிற நிலைமை இருக்கு. இதை ஏன் அவையள் கணக்கில எடுக்கமாட்டினமாம்?

எலி 2 : கடவுளே எங்களை உதறித்தள்ளிப் போட்டார். உவையள் உணருவினமோ?

எலி 5 : எண்டாலும் கடவுள் எண்ட சக்தி ஒண்டு இருக்கு. அது சும்மா பார்த்துக் கொண்டிராது. ஒருநாள் எங்கட வாழ்க்கைப் பிரச்சினையில தலையிட்டு, எங்கட கஷ்டத்தைத் தீர்க்கும்தானே?

வாத்தியார் எலி : அதை நான் மறுக்கேல. ஆனால் பிரச்சினை கடவுள் இல்ல. நீங்கள்தான்.

எலி 5 : என்ன வாத்தியார் அய்யா, குண்டைத் தூக்கிப் போடுறியள்?

வாத்தியார் எலி : கடவுள் நல்லவர், வல்லவர், நீதியானவர், இரக்கமுள்ளவர், அன்புமயமானவர் எண்டு நீங்கள் நம்பினால்மட்டும் போதாது. நீங்கள் அந்தக் கடவுளாக மாறவேணும்!

எலி 2 : அய்யா நாங்கள் கடவுளாக மாறவேணுமோ? என்ன பகிடிவிடுறியளோ?

வாத்தியார் எலி : பகிடி இல்லை. கடவுள் உங்கட பிரச்சினையை தீர்ப்பர் எண்டு நீங்கள் நம்பினால், அந்த நம்பிக்கை உங்களுக்கு ஒரு ஆன்ம பலத்தைத் தரும் எண்டால், நீங்கள் அந்த கடவுளாக மாறினால்தான் உங்கட பிரச்சினையை நீங்கள் தீர்க்கலாம். கடவுள் நேரவந்து உங்கட பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

எலி 1 : அய்யா நீங்கள் சொல்லுறது நியாயமாகவும் இருக்கு. ஏற்கத் தயக்கமாகவும் இருக்கு. தருமசங்கடமாக இருக்கு அய்யா.

வாத்தியார் எலி : விதியையும் சமூக சூழலையும் எதிர்த்துப் போராடி புதிய சமுதாயத்தை உருவாக்கினால்தான் நாங்கள் வெல்ல முடியும். இதுதான் எங்களுக்கு முன்னால இருக்கிற பெரிய சவால். ஆனால் இதில பெரிய ஆபத்தும் இருக்கு.

எலி 1 : ஆபத்து இருக்கோ அய்யா?

வாத்தியார் எலி : சாதாரண சனங்கள் இப்படிச் சிந்தித்துச் செயல்படுகிறத மேட்டுக்குடியோ அடக்குமுறையாளர்களோ மதவாதிகளோ அனுமதிக்கமாட்டினம். அப்படி அனுமதிச்சால் தங்கட வசதிவாய்ப்பு கெட்டுப்போகும் எண்ட பயம். ஓநாயிடம் இருந்து ஆட்டைக்காப்பாத்த நரி ஓநாயோட சண்டைபிடிக்கிறமாதிரி, தமிழ் ஆட்களை காப்பாத்த தங்களுக்குள்ள சண்டை பிடிக்கினம். இருந்தாலும் சனங்களை ஒன்றுபடவிடாமல் பிரிக்கிறதில அவையள் ஒன்றுபட்டிருக்கினம். சனங்கள் ஒன்றுபடுறதை ஆதிசக்திகள் சகிச்சுக்கொள்ளாது. இலட்சியமோ, நல்ல கொள்கையோ இல்லாத இந்த கும்பல், அடக்குமுறையாளர் குடுக்கிற நிவாரணத்தில அரசியல் நடத்தினம். இந்த வஞ்சனையில் இருந்து முதலில் சனங்களைக் காப்பாற்ற வேணும்.

எலி 1 : அய்யா இது நடக்கக் கூடிய காரியமோ?

வாத்தியார் எலி : நடக்கும் எண்டால் நடக்கும் எண்ட சிந்தனை நிமிரவேணும். வாடிச்சாவதிலும் வாழ்வுக்காய்ச்சாகிற தியாகஉணர்வு சுடர்விட்டு எழும்பவேணும். சனங்களுக்குச் சமூகத்தைப் பற்றி, அரசியலைப் பற்றி, மதத்தைப் பற்றி, அறிவியல் பற்றிக்

கற்றுக்குடுக்க வேணும். அவர்களைப் புரட்சித் தீப்பொறிகளாக மாத்த வேணும். (ஆக்குரோசமாக) எங்களுக்க ஒற்றுமை இல்லாமல் போனதில இத்தனை பெரிய சமாச்சாரங்கள் இருக்கு எண்டத நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறியள்?

எலி 4 : அய்யா நீங்கள் கோவிக்கிறியள்.

வாத்தியார் எலி : இது கோபமில்ல தம்பி! ஒரு மன எரிவு! எவ்வளவ இழந்து, இண்டைக்கு கூனிக் குறுகி நிக்கிறம் எண்ட வெப்புசாரந்தான். விழுந்த பக்கத்துக்கு குறிசுடுகிறவனும், வெண்ட பக்கத்துக்கு குண்டிய அரக்கிறவனும் எங்களுக்க நிறையப்பேர் இருக்கினம். மனம் ஆறும் எண்டா ஆறுமோ?

**வாத்தியார் எலி சில கணத்துளிகள் அமைதியாக நிற்க எலிகள் எல்லாம் அவரை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க**

எலி 1 : நாங்கள் குட்டிச்சுவராகிப் போனதே இந்த சுயநலத்தினாலதான்.

வாத்தியார் எலி : எங்களுக்க இனக்குரோதம், மதக்குரோதம் வருணக் குரோதம் தடிச்சுப்போய் இருக்கு. அண்டுதொட்டு இண்டுவரை மொழியால, தொழிலால, நட்பால, நகமும் தசையுமாக வாழ்ந்தவர்களை, அயராத உழைப்பால உயர்ந்தவர்களை, வாங்கொலி கேட்டு நெஞ்சு நிறைஞ்சவர்களை, உடுத்த துணியோட ஓட ஓட துரத்தினம், தொப்பி பிரட்டியள் எண்டு வசை பாடி எங்கட தலையில மண்ணை அள்ளிப் போட்டம். எங்களுக்கு விடிவு வருமோ ?

எலி 1 : (சோகத்துடன்) நாங்கள் எதைப் பேச? குற்ற உணர்வு எங்களைக் குத்துது.

வாத்தியார் எலி : நாங்கள் அவசியம் எது எண்டு தெரிஞ்சுகொள்ளேல. கடல் தாண்டி வந்த மிராஜ்! மிராஜ்.... கடல் தாண்டி வந்து சஞ்சீவி போட்டது. நாங்கள் வரவேற்றம். மாலைபோட்டம். ஆரத்தி எடுத்தம். சூடாறமுன்னமே குழப்பியடிச்சம். தண்டுதடிகொண்டு அடிச்சுத் துரத்தினம் எண்டு வீரமுழக்கம் செய்தம். அண்டைக்கே நாங்கள் தோற்றுப்போனம். இல்லை செத்தேபோனம். சருவலோலனுகளின் ஏவல்பேய் களாய் எங்கட வீட்டுக் கூரையை நாங்களே பிடுங்கினம். எங்கட மாந்தீவின் அவலங்களுக்கு சருவலோலனுகள்தான் முக்கியகாரணம். அவங்கட ஆதிக்கத்தை கட்டுப்படுத்தாதவரை **த.மு.சி.**களுக்கு விடுதலை இல்லை. **த.மு.சி.**கள் சேர்ந்து இதைப்பற்றி யோசிக்க வைக்கவேணும்.

எலி 1 : அப்ப அவலப்பட்ட எங்கட சனங்களுக்கு நன்மைசெய்த ஒருத்தரும் எங்களுக்க இல்லையோ?

வாத்தியார் எலி : மனிசரை நேசிச்சவே இருக்கினம். தனி மனிசராக, குழுக்களாக, நிறுவனமாக இருக்கினம். பசி நெருப்பில, அச்சநடுக்கத்தில, மக்கள் அவலப்பட்ட நேரத்தில், சரி பிழைக்கு அப்பால், துணிஞ்சு தண்டிஞ்சோறுபோட்ட, கொஞ்சமேனும் பாதுகாப்புக் குடுத்த துரோகிகள் இருக்கினம்.

எலி 5 : என்ன வாத்தியார் அய்யா? இப்பிடி உதவி செய்தவே துரோகிகளோ?

வாத்தியார் எலி : எங்கட யாழ்ப்பாணப் பெருங்குடி அகராதியில நன்மை செய்யுறதுக்கு அர்த்தம் துரோகம்தான்.

எலி 1 : இனி என்ன செய்ய?

வாத்தியார் எலி : (உரத்து) கோடு தாண்டி அய்க்கியப்படு! அச்சம் தவிர்! அர்ப்பணம் செய்!

**எலிகளெல்லாம் எழுச்சியுடன் இந்தக் கோசத்தை எழுப்புதல்**

எலிகள் : கோடு தாண்டி அய்க்கியப்படு! அச்சம் தவிர்! அர்ப்பணம் செய்!

**வாத்தியார் எலி பாடத் தொடங்க மற்ற எலிகள் அவருடன் பாடுதல்**

பாட்டு : பட்டுவாங்கலயோ பட்டு!
பட்டுவாங்கலயோ பட்டு!
பட்டுவாங்கலயோ பட்டு!

.....

வாங்கிக்கட்டு வாங்கிக்கட்டு
ஐக்கியப்பட்டு வாங்கிக்கட்டு
வாழ்க்கை என்ற நெசவினிலே
கஷ்ரப்பட்டு நெய்தபட்டு - வாங்கி

நூறுபட்டுப் போனதினால்
கூறுட்டு மோதியதால்
காயப்பட்டு துன்பப்பட்டு
போனவனே வாங்கிக் கட்டு - வாங்கி

கொல்லப்பட்டு குறுக்கப்பட்டு
தொல்லைப்பட்டு அவதிப்பட்டு
அடிமைப்பட்டு வாழ்க்கைப்பட்டு
நொந்தவனே வாங்கிக் கட்டு - வாங்கி

மானப்பட்டு ரோசப்பட்டு
மனிசருக்கு வாய்ச்சப்பட்டு
விவேகப்பட்டு வீரப்பட்டு
வாங்கிக்கட்டு வெற்றிப்பட்டு - வாங்கி

**இப்பாட்டுடன் எலிகள் உத்வேகம் அடைய எலி 5**

எலி 5 : வாத்தியார் ஐயா! நீங்கள் எங்கட கண்ணை திறந்திட்டியள்! இனி என்ன செய்ய?

வாத்தியார் எலி : நான் சொல்லிற திட்டம் உங்களுக்குப் பிடிச்சிருந்தால் அதைப்பற்றி சிந்திப்பம் சீர்தூக்கிப் பாப்பம். செயல்படுவம்.

எலி 4 : நீங்கள் சொல்லுங்கோ! சீர்தூக்கிப்பாப்பம், சிந்திப்பம், அர்ப்பணம் செய்ய தயாராக இருக்கிறம்.

**இப்பொழுது வாத்தியார் எலி எல்லா எலிகளையும் சைகையால் அழைத்து தனது திட்டத்தை விளக்க, மற்ற எலிகள் எல்லாம் ஆமோதிப்பது போல் பாவனை செய்யும் வேளையில் மேடையின் பின் புலத்தில் பூனை மியாவ் மியாவ் என்று கத்த, வாத்தியார் எலி ......**

வாத்தியார் எலி : (அவசரமாக/நிதானமாக) சரிசரி! நிமிருங்கோ! தயாராகுங்கோ! நேரம் வந்திட்டுது. (எலி 4 இன் தோளில் கை போட்டு) மற்றவே எல்லாரும் சுவரின் பின்புலத்தில் ஒளிந்து கொண்டு தயாராக இருங்கோ! பதட்டமோ! பயமோ வேண்டாம்! நிதானம்! நிதானம் வேணும்! கோடுதாண்டி அய்க்கியப்படு! அச்சம் தவிர்! அர்ப்பணம் செய்!

இந்தக் கோசத்தை மற்ற எலிகள் எல்லாம் முழங்கிக் கொண்டு சுவரின் பின் புலத்தில் ஒளிய சுவரின் முன் புலத்தில் எலி 4 மட்டும் நிதானமாக எச்சரிக்கையுடன் அங்கும் இங்கும் உலவ, பூனை மியாவ் மியாவ் மியாவ் என்று கத்திக் கொண்டு ஆக்ரோசமாக எலி 4 மேல் பாய எலி 4 திடீரென்று விலக, பூனைக்கும் எலிக்குமான கணநேர உரசலின் போது சுவரின் பின்புலத்தில் ஒளிந்திருந்த எலிகள் எல்லாம் ஆக்ரோசமாக, கோடுதாண்டி அய்க்கியப்படு! அச்சம் தவிர்! அர்ப்பணம் செய்! என்று முழங்கிக் கொண்டு சுவரின் இரு பக்கத்தாலும் வந்து பூனையை சுற்றிவளைத்து அச்சுறுத்த, வாத்தியார் எலி கட்டளையிடும் பாவனையில் அசையாது நிற்க, மிரண்டு போன பூனை பாய்ந்து மேடையை விட்டு ஓட, வெற்றி பரபரப்போடு வாத்தியார் எலி பாட, மற்ற எலிகளும் சேர்ந்து பாடுதல்.

பாட்டு : ஞானம் பிறந்தது நெஞ்சுக்குள்ளே
ஒற்றுமை வந்தது வாழ்க்கையிலே
அஞ்சி ஒடுங்கிய எங்கள் பரம்பரை
அக்கினிக் குஞ்சுகள் ஆக நிமிர்ந்தன - ஞானம்

அச்சம் இல்லை என்ற வாழ்வு மலர்ந்தது
மிஞ்சும் அதிகார வர்க்கம் தளர்ந்தது
ஒற்றுமையாம் இந்த ஞானம் பிறந்திட்டால்
இற்று விழுவது விலங்குகள் தாம் - ஞானம்

பாட்டு முடிவில் எலிகள் எல்லாம் வாத்தியார் எலியை நெருங்கி வந்து வலது கைகளை மேலே உயர்த்தி முஷ்டியாக மடித்து நிமிந்து நிற்க நாடகம் நிறைவு பெறுகிறது.

சுபம்

## உண்மையான நோன்பு

பேரொலி எழுப்பிக் கூப்பிடு, நிறுத்தி விடாதே,
எக்காளம் முழங்குவதுபோல் உன்குரலை உயர்த்து,
என் மக்களுக்கு அவர்களின் வன்செயல்களையும்
அவர்களின் பாவத்தையும் எடுத்துக்கூறு.

நீங்கள் நோன்பிருக்கும் நாளில்
உங்கள் ஆதாயத்தையே நாடுகிறீர்கள்,
உங்கள் வேலையாள்கள் அனைவரையும்
ஒடுக்குகிறீர்கள். இதோ வழக்காடவும்,
கொடும் கையால் தாக்கவுமே,
நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்

ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா
நான் உண்ணாநோன்பின்
நாளாகத் தெரிந்து கொள்வது?
ஒருவன், நாணலைப்போல் தன்தலையைத் தாழ்த்திச்
சாக்கு உடையையும் சாம்பலையும்
அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு?
இதையா நோன்பு என்றும்
ஆண்டவருக்கு உகந்தநாள் என்றும் அழைக்கிறீர்கள்?

கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும்
நுகத்தின் பிணையலை அறுப்பதும்
ஒடுக்கப்பட்டவரை விடுதலை செய்து
அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும்
உடைப்பதும் அன்றோ நான் தெரிந்துகொள்ளும் நோன்பு!

பசித்தோர்க்கு உங்கள் உணவைப்
பகிர்ந்துகொடுப்பதும்
தங்கஇடமிலாத வறியோரை
உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும்
உடை அற்றவரைக் காணும்போது,
அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும்
உங்கள் இனத்தாருக்கு உங்களை
மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ,
நான் விரும்பும் நோன்பு!

உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு
சுட்டிக்காட்டிக் குற்றம் சாட்டுவதையும்
பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு
பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து,
வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால்,
இருள் நடுவே, உன் ஒளி உதிக்கும்,
இருண்ட உன் நிலை நண்பகலாகும்.

எசாயா : 58 : 1 - 10

"உன்னை விசாரணை செய் - அல்லதுபோகில்
வரலாறு உன்னை விசாரணை செய்யும்"

Shakthi printers,
Urumpirai, Palaly Rd.
021 2230749